# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 257 | 4 Pages | 20.4.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur
மலர்: 01 | இதழ்: 257 | 4 பக்கங்கள் | 20.4.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்

## சோகமாக இருக்கிறீர்களா? ஊழியர்களுக்கு 10 நாள் லீவ் அறிவித்த சீன நிறுவனம்



சீனா, ஏப். 20

சீனாவைச் சேர்ந்த சூப்பர் மார்க்கெட் நிறுவனமான 'Fat Dong Lai' தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் சோகமாக இருக்கும் நாள்களில் வருடத்தில் 10 நாட்கள் வரை கூடுதலாக விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒரு நாளைக்கு ஏழு மணிநேரம் வேலை நேரமாகும். மேலும், 30 முதல் 40 நாள்கள் வரை வருடாந்திர விடுப்பு வழங்கப்படுகிறது. சீனபுத்தாண்டுகாலத்தில் இந்நிறுவனம் ஐந்து நாள்களுக்கு மேல் மூடப்படுவதால் அப்போதும் ஊழியர்களுக்கு விடுமுறை தான்.

இந்த நிறுவனத்தின் ஊழியர்களின் சராசரி மாதச் சம்பளம் 7,000 யுவான் (இந்திய மதிப்பில் ரூ. 80,878) ஆகும்.

"எல்லோருக்கும் அவர்கள் மகிழ்ச்சியாக இல்லாத நாட்கள் உள்ளன, எனவே நீங்கள் மகிழ்ச்சியாக இல்லாவிட்டால், வேலைக்கு வரவேண்டாம். இந்த மாற்றத்தின் மூலம், ஊழியர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை தீர்மானிக்க சுதந்திரமாக இருப்பார்கள். இந்த விடுப்பை நிர்வாகத்தால் மறுக்க முடியாது" என்று நிறுவனர் யூ டோங் லாய் கூறியுள்ளார்.

2021ஆம் ஆண்டு சீனாவில் பணியிட கவலை குறித்த கணக்கெடுப்பின்படி, 65 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்கள் வேலையில் சோர்வாகவும் மகிழ்ச்சியற்றவர்களாகவும் உணர்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனுக்கு உடனடியாக ஆயுத உதவி வழங்க ஜி20 நாடுகளுக்கு ஐரோப்பிய யூனியன் வலியுறுத்தல்



உக்ரைன், ஏப். 20


உக்ரைன் மீது ரஷியா மூன்றாவது ஆண்டாக தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. தற்போது உக்ரைனில் உள்ள கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்காவின் உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் உக்ரைனிடம் வான் பாதுகாப்பு ஆயுதங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக கடந்த வாரம் மிகப்பெரிய மின்சார உற்பத்தி நிலையம் மீதான தாக்குதலை உக்ரைனால் எதிர்கொள்ள முடியாமல் போனது.

8 மாடி கட்டடம் மீது ரஷியா நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் இத்தாலில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது உக்ரைன் ரஷியா போர், இஸ்ரேல் மீது இதுவரை இல்லாத வகையில் ஈரான் தாக்குதல் ஆகியவை குறித்து ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுத்துறை கொள்கை தலைவர் ஜோசப் பொர்ரேல் ஜி7 நாடுகளில் வெறியுறவுத்துறை மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது "உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு சிஸ்டங்களை உடனடியாக வழங்க உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டால் இந்த போர் ரஷியாவுக்கு சாதமாக சாய்ந்து விடும். ரஷியாவில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளை தாக்கி அழிக்க பேட்ரியாட் ஏர் பாதுகாப்பு ஏவுகனை சிஸ்டம்ஸ் இல்லை என்றால், உக்ரைனில் உள்ள மின்சார் சிஸ்டங்கள் அழிக்கப்படும். எந்தவொரு நாடும் வீடுகளில், தொழிற்சாலைகளில், போரின் முன்னணி களத்தில் மின்சாரம் இல்லாமல் சண்டையிட முடியாது" என்றார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது இத்தாலி வெளியுறவுத்துறை மந்திரி ஆண்டனியோ டஜானி "உக்ரைன் தோல்வியடைந்தால் அமைதிக்கான பேச்சுவார்த்தையில் புதின் அமரமாட்டார்" என்றார். மேலும், ஈரானுக்கு எதிராக புதிய பொருளாதார தடைக்கு அழைப்பு விடுத்தார்.

## விமர்சனத்திற்குள்ளான ரெயில் நிலைய வடிவமைப்பு



சீனா, ஏப். 20

சீனாவின் நான்ஜிங் வடக்கு ரெயில் நிலையத்தில் புதிய வடிவமைப்பு தொடர்பான படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகியது. இந்த ரெயில் நிலையத்தின் கட்டுமான பணிகள் விரைவில் தொடங்க உள்ளது.

மரக்கூரைகள் மற்றும் ஜன்னல் வடிவங்கள் போன்ற பாரம்பரிய சீன கட்டிடக்கலை அம்சங்களை கொண்டு நவீனத்துவம் கலந்து இந்த ரெயில் நிலைய கட்டிடம் கட்டப்பட உள்ளது. இந்திய மதிப்பில் சுமார் 23 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள இந்த ரெயில் நிலையம் சீன கட்டிடக்கலையின் தனித்துவத்தை பின்பற்றும் வகையில் இருக்கும் என கருதப்படுகிறது.

இந்நிலையில் இந்த ரெயில் நிலையத்தின் வடிவமைப்பு தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியான நிலையில் பயனர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை பதிவிட்டனர்.

பிளம் மலர்களால் ஈர்க்கப்பட்டு இந்த ரெயில் நிலையத்தின் வடிவமைப்பு இருப்பதாக சிலர் பதிவிட்டனர்.

அதே நேரம் இந்த ரெயில் நிலையத்தின் தோற்றம் ராட்சத சானிட்டரி பேட் போல தெரிகிறது. இந்த வடிவமைப்பை பிளம் பிளாசம் போல் இருக்கிறது என்று சொல்வது வெட்கமாக உள்ளது என நெட்டிசன்கள் விமர்சித்துள்ளனர்.

# மின்னணு எந்திரம் பழுதால் அரைமணி நேரம் காத்திருந்து வாக்குப்பதிவு செய்த திருப்பூர் மேயர்




திருப்பூர்: ஏப். 20

பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு தமிழகம் முழுவதும் தொடங்கி நடைபெற்று வருகிறது. திருப்பூர் பாராளுமன்றத் தொகுதியில் 1745 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் காலை முதலே ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்குப்பதிவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் திருப்பூர் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட தெற்கு சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட கே.என்.பி., காலனி பகுதியில் வாக்குச்சாவடி 222ல் வாக்களிக்க மாநகராட்சி மேயரும் திருப்பூர் வடக்கு மாநகர தி.மு.க. செயலாளருமான தினேஷ் குமார் காலை 6:50 மணிக்கு வந்தார்.

இந்தநிலையில் 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதும் முறையான ஆவணங்களை காண்பித்து கையில் மை வைத்து வாக்குப்பதிவு செலுத்த சென்றார். திடீரென வாக்குப்பதிவு எந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக வாக்குப்பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. சுமார் 30 நிமிடங்கள் வரை காத்திருந்த மேயர் தினேஷ்குமார் வாக்குப்பதிவு எந்திரம் சரிபார்க்கப்பட்டு சோதனை செய்த பிறகு மீண்டும் தனது வாக்கினை பதிவு செய்தார்.

# குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு இல்லை என புகார்: தேர்தலை புறக்கணித்த மானூர் கிராம மக்கள்



நெல்லை: ஏப். 20

நெல்லை பாராளுமன்ற தொகுதியில் இன்று காலையில் வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து வாக்காளர்கள் ஆர்வமுடன் வந்து வாக்களித்து வருகின்றனர்.

இதில் பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மானூர் அருகே உள்ள அலவந்தான்குளம் செயின்ட் அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி எண் 93ல் மொத்தம் 997 வாக்குகள் உள்ளன. ஆனால் காலை 10.30 மணி வரையிலும் அங்கு 12 வாக்குகள் மட்டுமே பதிவாகி இருந்தது.

மானூர் அருகே பல்லிக்கோட்டை, நெல்லை திருத்து அம்மன்கோவில் தெரு மக்கள், கிருஷ்ணன் கோவில் தெரு மக்கள், தெற்கு தெரு மக்கள் மற்றும் அயல்நாடு வாழ் வாக்காளர்கள் இங்கு வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

அலவந்தான்குளம் பகுதியில் உள்ள பொதுக்கிணற்றில் குடிநீர் எடுப்பது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு பலமுறை புகார் அளித்தும் இதுவரை தீர்வு எட்டப்படவில்லை என்று கூறி நெல்லை திருத்து மற்றும் பல்லிக்கோட்டை கிராம மக்கள் அங்கு வாக்களிக்காமல் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அந்த வாக்குச்சாவடியில் தேர்தல் ஊழியர்கள் மட்டுமே இருந்தனர். பூத் வெறிச்சோடி காணப்பட்டது.

## வேங்கைவயலில் தேர்தல் புறக்கணிப்பு



புதுக்கோட்டை:, ஏப். 20

இந்தியாவில் 18வது பாராளுமன்ற தேர்தல் இன்று தொடங்கி ஜூன் மாதம் 1ந்தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் தமிழகம், புதுச்சேரி உள்பட 21 மாநிலங்களில் 102 தொகுதிகளில் முதல் கட்ட தேர்தல் இன்று நடைபெறுகிறது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வாக்குச்சாவடி மையங்களில் பொதுமக்கள் அனைவரும் ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர்.

இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயலில் குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படாததால் எதிர்ப்பு தெரிவித்து அக்கிராம மக்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில் மதியம் 1 மணி வரை அங்கு ஒரு வாக்கு கூட பதிவாகவில்லை, அதிகாரிகள் வாக்காளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

## இறந்ததாக கூறியதால் வாக்களிக்க வந்தவர் ஏமாற்றம்



மேலசொக்கநாதபுரம், ஏப். 20

தேனி மாவட்டம் போடியை சேர்ந்தவர் சந்திரன் (வயது 56). கூலித்தொழிலாளியான இவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இன்று அப்பகுதியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்திற்கு சென்ற போது அவர் இறந்துவிட்டதாக வாக்காளர் ஜாபிதாவில் இருந்துள்ளது. இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த சந்திரன் தனது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு வாக்களிக்க பெயர் உள்ளது. தனது பெயர் மட்டும் எவ்வாறு விடுபட்டது? என கேள்வி எழுப்பினார்.

நகராட்சி அலுவலகத்தில் சென்று விண்ணப்பம் அளித்து புதிதாக வாக்காளர் அட்டைக்கு மனு அளிக்குமாறு அவர்கள் தெரிவித்தனர்.

பூத் சிலீப் வழங்கப்பட்டும் அதிகாரிகள் குளறுபடியால் பெயர் இறந்ததாக கூறியதால் அவர் அதிர்ச்சி அடைந்தார்.

## தேர்தல் அலுவலர் முதல் போலீஸ் வரை... பெண்கள் மட்டுமே பணியாற்றிய 1,461 வாக்குப்பதிவு மையங்கள்

சென்னை: ஏப். 20

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

சென்னையில் 3,726 வாக்குச்சாவடிகளில் இன்று ஓட்டுப்பதிவு நடைபெற்றது. 48.69 லட்சம் பேர் ஓட்டு போடுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. 39 சதவீதம் அளவிலான மையங்களில் பெண்கள் மட்டுமே நிர்வகிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பெண்கள் மட்டுமே பணிபுரியும் வகையில் 16 இடங்களில் 1,461 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த சாவடிகளில் போலீஸ் உள்பட அனைத்து தேர்தல் அலுவலர்களும் பெண்களாகவே பணியமர்த்தப்பட்டிருந்தனர். வில்லிவாக்கம் பகுதியில் 38 பேர், திரு.வி.க.நகரில் 21 பேர், எழும்பூரில் 48 பேர், ராயபுரத்தில் 40 பேர், துறைமுகத்தில் 18 பேர், சேப்பாக்கம்திருவல்லிக்கேணியில் 62 பேர், ஆயிரம்விளக்கில் 145 பேர், அண்ணாநகரில் 140 பேர், விருகம்பாக்கத்தில் 183 பேர், சைதாப்பேட்டையில் 158 பேர், தி.நகரில் 163 பேர், மயிலாப்பூரில் 187 பேர், வேளச்சேரியில் 113 பேர் என சட்டமன்ற தொகுதி வாரியாக பெண் பணியாளர்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு வாக்குப்பதிவு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பணியில் ஈடுபட்டனர். சென்னையில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கியூ ஆர் குறியீடு கொண்ட போஸ்டர் ஒட்டப்பட்டு உள்ளது. அதை ஸ்கேன் செய்து தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளித்தால் பரிசு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளன. இதனை பொதுமக்கள் ஸ்கேன் செய்து கேள்விகளுக்கும் விடை அளித்தனர். இந்த மையங்களில் கர்ப்பிணிகள், மூதாட்டிகள், கைக்குழந்தையுடன் வருபவர்கள் ஓட்டு போட தனி வரிசை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதை தவிர இங்கு பிரத்யேக வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. முதியோர் ஓய்வு அறை மற்றும் உதவி மையம், குழந்தைகள் விளையாடும் இடம் சாய்தளங்கள் ஆகியவை இந்த மையங்களில் முறையாக ஏற்படுத்தப்பட்டிருந்தது.

# வேலூரில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் கோளாறு

வேலூர், ஏப். 20

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில் நாடாளுமன்ற தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. காலையில் இருந்தே மக்கள் தங்களது ஜனநாயக கடைமையை ஆற்றி வருகின்றனர்.



இந்தநிலையில், வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதி காந்திநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் வாக்களிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. வாக்களிக்க மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர். இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள கோளாறை சரிசெய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# நாடாளுமன்ற தேர்தல்: எடப்பாடி பழனிசாமி வாக்களித்தார்

சேலம், ஏப். 20

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில் நாடாளுமன்ற தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. காலையில் இருந்தே மக்கள் தங்களது ஜனநாயக கடைமையை ஆற்றி வருகின்றனர். பதற்றமான வாக்குச்சாவடிகளில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



இந்த நிலையில், சேலம் மாவட்டம் எடப்பாடியை அடுத்த சிலுவம்பாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மக்களோடு மக்களாக வரிசையில் நின்று தனது வாக்கினை பதிவு செய்தார்.

# வாக்குச்சாவடியில் எத்தனை பேர் நிற்கிறார்கள்: வீட்டில் இருந்தே அறிந்து கொள்ளலாம்: எப்படி தெரியுமா?

சென்னை, ஏப்.20

இந்தியாவில் 18வது நாடாளுமன்ற தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு இன்று (வெள்ளிக்கிழமை) நடக்கிறது. தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகள் உள்பட 21 மாநிலங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கிறது. ஒவ்வொரு தேர்தலிலும் பொதுமக்கள், நமது வாக்குச்சாவடியில் கூட்டம் இருக்குமா? எப்போது செல்லலாம்? இப்போது சென்றால் உடனே வாக்களித்து விடலாமா? என்ற எண்ணத்திலேயே இருப்பார்கள்.



அவர்களுக்கு உதவி புரியும் வகையில் தேர்தல் ஆணையம் புதிய வசதியை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது உங்கள் வாக்குச்சாவடியில் வாக்களிக்க எத்தனை பேர் நின்று கொண்டு இருக்கிறார்கள் என்பதனை நாம் வீட்டில் இருந்தப்படியே தெரிந்து கொள்ளலாம். இங்கே உள்ள கியூஆர் கோடுஐ ஸகேன் செய்தோ, https://erolls.tn.gov.in/Queue/ என்ற இணையதளத்தில் சென்றோ உங்களது வாக்குச்சாவடிகளின் விவரங்களை பதிவு செய்ய வேண்டும். இதன்மூலம் அங்கு எத்தனை பேர் நின்று கொண்டு இருக்கிறார்கள் என்ற தகவலை தெரிந்து கொள்ளலாம். வாக்குச்சாவடியில் கூட்டத்தை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை பலன் அளிக்கும் என்று தேர்தல் ஆணையம் கூறி உள்ளது.

# தேர்தல் வழக்குகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யாதது ஏன்..? மதுரை ஐகோர்ட்டு கேள்வி

மதுரை, ஏப். 20

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த தனலட்சுமி, தன் மீதான தேர்தல் வழக்கை ரத்துசெய்யக்கோரிமதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இதேபோல விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த 2 பேரும் மனு தாக்கல் செய்திருந்தனர்.



இந்த வழக்கை விசாரித்த நீதிபதி புகழேந்தி, கடந்த 2019,2021ம் ஆண்டுகளில் நடந்த நாடாளு மன்றத்தேர்தல்,

சட்டமன்றத்தேர்தல்களில் பணப்பட்டுவாடா சம்பந்தமாக எத்தனை வழக்குகள் பதிவாகி உள்ளன? அந்த வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டு உள்ளதா? என அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டார்.

அதன்படி டி.ஜி.பி. சார்பில் தாக்கல் செய்த அறிக்கையில், 2019ம் ஆண்டில் தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக 4,349 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. அதில்1,733 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. அதேபோல 2021ம் ஆண்டு நடந்த தேர்தல் சம்பந்தமாக 8,655 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, அவற்றில் 1,414 வழக்குகளில் தொடர்புடையவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் அந்த வழக்கை நீதிபதி புகழேந்திநேற்றுவிசாரித்தார்.

அப்போது நீதிபதி, தமிழகத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேர்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதில் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. இதுதொடர்பான முழு விவரங்களையும் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் ஏன் பதிவு செய்யவில்லை?

அவ்வாறு செய்தால் தான் இந்த தகவல்களை பார்த்து, அடுத்த தேர்தலின்போது இந்த நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். இதை செய்யாததால், பணப்பட்டுவாடா சம்பவங்கள் அதிகரிக்கின்றன என கவலை தெரிவித்தார்.

விசாரணை முடிவில், தேர்தல் வழக்குகளின் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

# கோடைகாலம் என்பதால் மின்சார பயன்பாடு நாளுக்கு நாள் உயர்ந்து வருவதாக மின்சார வாரிய அதிகாரிகள் தகவல்

சென்னை,ஏப்.20

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் இருந்த மின்சார நுகர்வுடன் ஒப்பிடும் போது கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் கோடை காலம் தொடங்கும் நேரத்தில் அதிகப்படியான மின்சார நுகர்வு இருக்கும் என்று கணிக்கப்பட்டது. அதன்படி வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதால் கடந்த ஆண்டின் அதிகபட்ச மின்சார நுகர்வை கடந்த மார்ச் 30 ந்தேதி 42 கோடி யூனிட் என்ற அளவை எட்டியது.

இந்தநிலையில் கடந்த 17ந்தேதி 44 கோடி யூனிட் மின்சார நுகர்வு இருந்ததாக மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறும்போது, 'தமிழ்நாட்டின் உச்சபட்ச மின்சார நுகர்வு 44 கோடி யூனிட்டுகளை தொட்டுள்ளது. இதுதான் தமிழ்நாட்டில் பதிவான மிக அதிக மின்சார நுகர்வு. முந்தைய காலங்களில் அதிகபட்சமாக மார்ச் 29 ந்தேதி ஒட்டுமொத்த மின்சார நுகர்வு 42 கோடி யூனிட்டாகும். இதன் மூலம் முந்தைய சாதனையை தமிழ்நாடு முறியடித்தது.



இதற்கு முன்பு கடந்த ஆண்டு ஏப்ரல் 20ந்தேதி இருந்த 42 கோடி யூனிட் என்ற உச்ச பயன்பாட்டை விட 63.4 லட்சம் யூனிட்டுகள் அதிகம். கோடைகாலம் என்பதால் மின்சார பயன்பாடு நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. அரசுக்கு சொந்தமான மின்சார பயன்பாட்டு நிறுவனம் இன்னும் கூடுதல் மின்சார தேவை வரும் நாட்களில் ஏற்படலாம் என்று கணித்துள்ளது. இம்மாத இறுதியில் மின்சாரத்தின் தேவை 21 ஆயிரம் மெகாவாட்டை கடக்க வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டில் இந்த கோடைகாலத்தில் மின்சார தடை ஏற்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை மின்சார வாரிய அதிகாரிகள் செய்து வருகின்றனர். இந்த முறை நாடாளுமன்ற தேர்தல் நடக்கும் நிலையில் மின்சார தடை பிரச்சினையாக மாற கூடாது. மாநிலம் முழுவதும் தடையில்லா மின்சாரம் வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. முன்னெச்ச ரிக்கை நடவடிக்கையாக, மின்சார வாரியம் ஏற்கனவே மாநிலம் முழுவதும் அவ்வப்போது பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. எனவே இந்த காலகட்டத்தில் பராமரிப்புக்காக 'மின் தடை' இருக்காது. அவசர காலம் தவிர வினியோகம் நிறுத்தக் கூடாது என கள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்றனர்.

# பராமரிப்பு பணி காரணமாக மின்சார ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவிப்பு

சென்னை, ஏப்.20

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பராமரிப்பு பணி காரணமாக சில மின்சார ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



அதன்படி, சென்னை மூர் மார்க்கெட்டில் இருந்து சூலூர்பேட்டை செல்லும் மின்சார ரெயில் காலை 5.20 மணியில் இருந்து 5.15 மணியாகவும், மதியம் 1.15 மணியில் இருந்து 1.05 மணியாகவும் நேர மாற்றம் செய்ய ப்படுகிறது. சென்னை மூர் மார்க்கெட்டில் இருந்து கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில் காலை 6.25 மணியில் இருந்து 6.30 மணியாகவும், மதியம் 4.55 மணியில் இருந்து 5.05 மணியாகவும் மற்றும் இரவு 8.55 மணியில் இருந்து 9 மணியாகவும் நேர மாற்றம் செய்யப்படுகிறது. மூர் மார்க்கெட்டில் இருந்து பொன்னேரி செல்லும் மின்சார ரெயில் மதியம் 2.05 மணியில் இருந்து 1.55 மணியாகவும், மூர் மார்க்கெட்டில் இருந்து அரக்கோணம் செல்லும் மின்சார ரெயில் இரவு 8.10 மணியில் இருந்து 8.20 மணியாகவும், மூர் மார்க்கெட்டில் இருந்து திருத்தணி செல்லும் மின்சார ரெயில் இரவு 8.20 மணியில் இருந்து 8.10 மணியாக நேர மாற்றம் செய்யப்படுகிறது.

சென்னை கடற்கரையில் இருந்து ஆவடி செல்லும் மின்சார ரெயில் இரவு 9.45 மணியில் இருந்து 9.10 மணியாகவும், சென்னை கடற்கரையில் இருந்து அரக்கோணம் செல்லும் மின்சார ரெயில் அதிகாலை 4.15 மணியில் இருந்து 4.05 மணியாகவும் நேர மாற்றம் செய்யப்படுகிறது.

சென்னை கடற்கரையில் இருந்து திருவள்ளூர் செல்லும் மின்சார ரெயில் அதிகாலை 5.20 மணியில் இருந்து 5.10 மணியாகவும், அதிகாலை 5.55 மணியில் இருந்து 5.40 மணியாகவும், மாலை 4 மணியில் இருந்து 4.30 மணியாகவும் நேர மாற்றம் செய்யப்படுகிறது. சென்னை கடற்கரையில் இருந்து பொன்னேரி செல்லும் மின்சார ரெயில் அதிகாலை 5.15 மணியில் இருந்து 5.20 மணியாக நேர மாற்றம் செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாலியல் தொல்லை வழக்கு; பிரிஜ் பூஷண் மனு மீதான தீர்ப்பு 26ந்தேதிக்கு ஒத்திவைப்பு



புதுடெல்லி, ஏப்.20

பா.ஜ.க. எம்.பி. பிரிஜ் பூஷண் மீது மல்யுத்த வீராங்கனைகள் கடந்த ஆண்டு பாலியல் குற்றச்சாட்டு சுமத்தினர். இது தொடர்பாக விசாரணை நடத்திய டெல்லி போலீசார், இந்த விவகாரத்தில் குற்றச்சாட்டுக்கானமுகாந்திரம் இருப்பதாக கோர்ட்டில் தெரிவித்தனர்.

இதனிடையே மல்யுத்த வீராங்கனைகள் தொடர்ந்த பாலியல் தொல்லைவழக்குதொடர்பான ஆவணங்களின் நகல்களை வழங்கக்கோரி டெல்லி ரோஸ் அவென்யூ கோர்ட்டில் பிரிஜ் பூஷண் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், "புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நான் இந்தியாவில் இல்லை என்பதால், அது தொடர்பான ஆவண நகல்களை எனக்கு வழங்க வேண்டும்" என்று பிரிஜ் பூஷண் தெரிவித்திருந்தார். மேலும் பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த மனுவுக்கு டெல்லி காவல்துறை மற்றும் மல்யுத்த வீராங்கனைகள் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் பிரிஜ் புஷண் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என அவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் பிரிஜ் புஷண் மனு மீது வரும் 26ந்தேதி உத்தரவுபிறப்பிக்கப்படும் என நீதிபதி பிரியங்கா ராஜ்புத் தெரிவித்துள்ளார்.

# நெல்லை: நாங்குநேரி அருகே அரிவாளை காட்டி மிரட்டி ரூ.33 லட்சம் கொள்ளை: 3 பேர் கைது

நெல்லை, ஏப்.20

நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகேயுள்ள வாகைக்குளம் பகுதியில் 33 லட்ச ரூபாய் பணத்துடன் பைக்கில் சென்று கொண்டிருந்த முருகன் மற்றும் வானமாமாலை ஆகியோரை 8 பேர் கொண்ட கும்பல் வழிமறித்துள்ளனர். பின்னர் அரிவாளை காட்டி மிரட்டி, அவர்களிடம் இருந்த பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பானபுகாரின்பேரில், போலீசார்உடனடியாக தனிப்படை அமைத்து தீவிர விசாரணை நடத்தினர். இந்த விசாரணையின்அடிப்படையில்வாகைக்குளம்பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் உள்ளிட்ட 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து 27 லட்ச ரூபாய் வரையிலான பணத்தை பறிமுதல் செய்த போலீசார், தொடர்ந்து தலைமறைவாக உள்ள 5 பேரை வலை வீசி தேடி வருகின்றனர். அதே சமயம், தேர்தல் நேரத்தின்போது சுமார் 33 லட்சம் ரூபாய் பணத்துடன் இருவர் பைக்கில் சென்றது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நாடாளுமன்ற முதல் கட்ட தேர்தல்: தமிழகம் முழுவதும் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் வாக்குப்பதிவு

சென்னை, ஏப். 20

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் இன்று காலை 7 மணிக்கு ஓட்டுப்பதிவு தொடங்கியது. பதற்றமான வாக்குச்சாவடிகளில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



சென்னை ஸ்டெல்லா மேரி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் நடிகர் ரஜினிகாந்த் வாக்களித்தார்.

தமிழக பா.ஜனதா தலைவரும் கோவை தொகுதி வேட்பாளருமான அண்ணாமலை, அரவக்குறிச்சியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

தென்சென்னைதொகுதி பா.ஜனதா வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் , சாலிகிராம் பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

அனைவரும் வாக்களியுங்கள்: பிரதமர் மோடி

2024 மக்களவைத் தேர்தல் இன்று தொடங்குகிறது! 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 இடங்களுக்கு வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொகுதிகளில் வாக்களிக்கும் அனைவரும் சாதனை அளவை எட்டும் வகையில் தங்களது வாக்குரிமையை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இளைஞர்கள் மற்றும் முதல்முறை வாக்காளர்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒவ்வொரு வாக்கும் ஒவ்வொரு குரலும் முக்கியமானது பிரதமர் மோடி

தமிழ்நாடு, அருணாசல பிரதேசம், அசாம், பீகார், சத்தீஷ்கார், மத்திய பிரதேசம், மராட்டியம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ராஜஸ்தான், சிக்கிம், திரிபுரா, உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், மேற்கு வங்காளம்,அந்தமான்நிகோபார், காஷ்மீர், லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி என 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெற்று வருகிறது

நாடாளுமன்ற தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவுடன் அருணாசல பிரதேசம், சிக்கிம் மாநில சட்டசபைகளுக்கும் இன்று தேர்தல் நடைபெற்று வருகிறது. அருணாசல பிரதேசத்தில் மொத்தம் 60 தொகுதிகள் உள்ளன. இதில் முதல்மந்திரி பெமா காண்டு உள்பட 10 பா.ஜனதா வேட்பாளர்கள் ஏற்கனவே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். எனவே மீதமுள்ள 50 தொகுதிகளில் இன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது. இந்த தொகுதிகளில் களமிறங்கி இருக்கும் 133 வேட்பாளர்களின் எதிர்காலத்தை 8.92 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயிக்கிறார்கள். இதற்காக 2,226 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

நாடாளுமன்ற தேர்தல்: தமிழகத்தில் மொத்தம் 6 கோடியே 23 லட்சம் பேர் ஜனநாயக கடமை ஆற்ற உள்ளனர்.

அடுத்த 5 ஆண்டுகள் நம்மை ஆளப்போவது யார் என்பதை தீர்மானிக்கும் 18 வது நாடாளுமன்ற தேர்தல் இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்கி ஜூன் மாதம் 1ந்தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் தமிழகம், புதுச்சேரி உள்பட 21 மாநிலங்களில் 102 தொகுதிகளில் முதல் கட்ட தேர்தல் இன்று நடக்கிறது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. இதேபோல் கன்னியாகுமரி மாவட்டம்விளவங்கோடு சட்டசபை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் இன்று தொடங்கியது

நாடாளுமன்ற தேர்தலில் வாக்குப்பதிவு செய்ய முதல் நபராக நடிகர் அஜித் குமார் வருகை தந்தார். திருவான்மியூர் பாரதிதாசன் தெருவில் அமைந்துள்ள பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் வாக்களிப்பதற்காக நடிகர் அஜித் குமார் வருகை தந்தார். 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கும் நிலையில், 6.45 மணியளவிலே அஜித் வருகை தந்தார்.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில், அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள், சுயேச்சைகள் என மொத்தம் 950 பேரும், புதுச்சேரி தொகுதியில் 26 பேரும் களத்தில் இருக்கின்றனர். அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 54 பேரும், குறைவாக நாகப்பட்டினம் தொகுதியில் 9 பேரும் போட்டியிடுகின்றனர்.

சென்னையை பொறுத்தவரை வடசென்னையில்35 பேரும், மத்திய சென்னையில் 31 பேரும், தென்சென்னையில் 41 பேரும் களம் காண்கின்றனர்.

தமிழகத்தில் மொத்தம் 6 கோடியே 23 லட்சத்து 33 ஆயிரத்து 925 வாக்காளர்கள் உள்ளனர். சென்னையில் உள்ள 3 தொகுதிகளில் மட்டும் 48 லட்சத்து 69 ஆயிரத்து 518 வாக்காளர்கள் இருக்கின்றனர். வாக்காளர்கள் ஓட்டு போட வசதியாக, தமிழகம் முழுவதும் 68 ஆயிரத்து 321 வாக்குச்சாவடிகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

# மீனாட்சி அம்மன் கோவில் செங்கோல் விவகாரம்; நீதிபதிகள் ஆகம விதி நிபுணர்கள் அல்ல: மதுரை ஐகோர்ட்டு கிளை கருத்து

மதுரை,ஏப்.20

மதுரையைச் சேர்ந்த தினகரன் என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த மனுவில், "மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழாவில் ஒவ்வொரு நிகழ்வும் ஆகம விதிகளை பின்பற்றி நடத்தப்படுகிறது. இந்தவிழாவின் 8ம் நாளில் பட்டாபிஷேக நிகழ்ச்சியின் போது மீனாட்சி அம்மன் கைகளில் இருந்து ஒப்புவிக்கப்படும் செங்கோலை அறங்காவலர் குழு தலைவர் பெற்றுக்கொள்வார்.

ஆகம விதிகளின்படி திருமணம் ஆகாதவரோ, கணவர் அல்லது மனைவியை இழந்தவரோ செங்கோலை பெற்றுக்கொள்ள இயலாது. தற்போது மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவராக பி.டி.ஆர். பழனிவேல் ராஜனின் மனைவி ருக்மணி



பழனிவேல் ராஜன் உள்ளார். அவர் கணவரை இழந்தவர் என்பதால், ஆகம விதிகளின்படி அவரிடம் செங்கோலை வழங்க இயலாது. வேறு தகுதியான நபரிடம் செங்கோலை வழங்க உத்தரவிட வேண்டும்" என்று மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர் மேல்முறையீடு செய்தார்.

இந்த மேல்முறையீட்டு மனு நீதிபதி சுரேஷ்குமார், நீதிபதி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், "கோவில் நிகழ்வுகளில் ஆகம விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும்" என வாதிடப்பட்டது. அதே சமயம், "தனி நீதிபதியின் உத்தரவு தெளிவாக உள்ளது. அதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை" என அரசு தரப்பு வாதிட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "அக்காலத்தில் என்ன நிகழ்ந்தது என்பது தெரியாது. நூல்களின் அடிப்படையில் நீதிமன்றம் முடிவுக்கு வர முடியாது. ஆகம விதிகள் என்ன? ஏதேனும் குறிப்புகள் உள்ளதா? எதை பின்பற்ற வேண்டும்? என்பது குறித்து ஒரே நாளில் நீதிமன்றம் முடிவுக்கு வர இயலாது.

ஆகம விதிகள் விவகாரத்தில் ஒரே நாளில் உத்தரவு பிறப்பிக்க நீதிபதிகள் ஆகம விதி நிபுணர்கள் அல்ல. ஆகம விதிகள் குறித்து முறையான ஆவணங்களை தாக்கல் செய்யுங்கள். அதனை ஆய்வு செய்து அடுத்த வருடம் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

# வாக்காளர் பட்டியல் பெயர் நீக்கத்தில் அரசியல்? அண்ணாமலை

ராம்நகர்,ஏப்.20

கோவை ராம்நகரில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வாக்குச்சாவடியில் பா.ஜ.க. வேட்பாளர் அண்ணாமலை ஆய்வு மேற்கொண்டார். இதன் பின் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

★ கோவையில் சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்டோரின் பெயர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இல்லை.

★ ஒரு வீட்டில் கணவருக்கு ஓட்டு உள்ளது. மனைவிக்கு இல்லாத நிலை.



★ கணவருக்கு ஒரு வாக்குச்சாவடியிலும், மனைவிக்கு ஒரு வாக்குச்சாவடியிலும் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளது.

★ வெளிநாடுகளில் இருந்து வந்த பலரின் வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது.

★ பல வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்படவில்லை.

★ பெயர்கள் நீக்கத்தில் அரசியல் இருக்குமோ என சந்தேகம் எழுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# எங்கு தவறு நடந்ததென தெரியவில்லை: நடிகர் சூரி குமுறல்

சென்னை, ஏப்.20

தமிழகத்தில் 39 பாராளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் வாக்குப்பதிவு இன்று காலை முதல் நடைபெற்று வருகிறது. அரசியல் கட்சி தலைவர்கள், வேட்பாளர்கள், திரைப்பிரபலங்கள் என பலரும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றனர். அதன்படி, நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜித், சூர்யா, கார்த்தி, விக்ரம், தனுஷ், விஷால், விஜய் ஆண்டனி, அரவிந்த் சாமி, ஜி.வி.பிரகாஷ், யோகி பாபு, நடிகைகள் குஷ்பு, ஆண்ட்ரியா, திரிஷா, அதிதி, இயக்குனர்கள் சங்கர், வெற்றி மாறன், பா.ரஞ்சித், இசையமைப்பாளர் அனிருத் உள்ளிட்ட பலரும் தனது வாக்கினை பதிவு செய்தனர். இந்நிலையில், சென்னை சாலிகிராமத்தில் உள்ள வாக்குச்சாவடிக்கு வாக்களிக்க சென்ற நடிகர் சூரிக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நடிகர் சூரி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த தேர்தல்களில் நான் வாக்களித்துள்ளேன். ஆனால் இந்த முறை என்னுடைய பெயர் விடுபட்டுள்ளதாக கூறுகின்றனர். எனது மனைவியின் பெயர் உள்ளது.

ஜனநாயக கடமையை ஆற்றமுடியவில்லை என்பது மன வேதனையாக உள்ளது. எங்கு தவறு நடந்ததென தெரியவில்லை. வேதனையுடன் கூறுகிறேன். தயவு செய்து அனைவரும் 100 சதவீதம் வாக்களியுங்கள் என்று கூறியுள்ளார்.

# ஈஷா யோகா மைய வழக்கு: ஜூன் 7ம் தேதிக்கு தள்ளிவைப்பு

சென்னை,ஏப்.20

தென்காசி மாவட்டம் குலசேகரபட்டியைச் சேர்ந்த விவசாயி திருமலை என்பவர், காணாமல் போன தன்னுடைய சகோதரரை மீட்டு தரக்கோரி ஆட்கொணர்வு மனு ஒன்றை சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்தார். அந்த மனுவில், "என் சகோதரர் கணேசன் என்ற சுவாமி பவதத்தா கோவையில் உள்ள ஈஷா யோகா மையத்தில் கடந்த 2007ம் ஆண்டு முதல் தன்னார்வலராக பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் 2ம் தேதி, ஈஷா யோகா மையத்தில் இருந்து என்னை தொலைபேசியில் அழைத்து, கணேசன் சொந்த ஊருக்கு வந்துள்ளாரா? என்று கேட்டனர். மேலும், 3 நாட்களாக ஈஷா யோகா மையத்துக்கும் அவர் வரவில்லை என்ற தகவலையும் தெரிவித்தனர். இது தொடர்பாக கடந்த ஆண்டு மார்ச் 5ம் தேதி ஈஷா யோகா மைய பொறுப்பாளர் தினேஷ் ராஜா, கோவை மாவட்டம் ஆலாந்துறை காவல் நிலையத்தில் புகார் ஒன்றையும் அளித்துள்ளார்.



இந்த புகார் மீது வழக்குப்பதிவு செய்த ஆலாந்துறை போலீசார் ஓராண்டு காலமாகியும் மந்தமான விசாரணை நடத்தி வருகின்றனர். எனவே, காவல் துறை விசாரணையை துரிதப்படுத்தி, காணாமல் போன என் சகோதரர் கணேசனை மீட்டு, நேரில் ஆஜர்படுத்த உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது காவல்துறை தரப்பில் ஆஜரான அரசு கூடுதல் குற்றவியல் வக்கீல், இதுவரை 36 பேரிடம் விசாரணை நடைபெற்றுள்ளது என்றும், ஈஷா யோகா மைய ஊழியர்கள், தன்னார்வலர்களிடம் விசாரணை நடைபெற்றுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும் ஈஷா யோகா மையத்தில் பணியாற்றி காணாமல் போன ஆறு பேரில் 5 பேர் திரும்பி வந்துவிட்டார்கள் என்று கூறினார். இதனையடுத்து வழக்கின் விசாரணை ஜூன் 7ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# பொதுவிடுமுறை அளித்தும் பலனில்லை சென்னையில் வாக்குப்பதிவு மந்தம்



சென்னை,ஏப்.20

தமிழகத்தில் உள்ள 39 பாராளுமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. மதியம் 3 மணி நிலவரப்படி தமிழகத்தில் வாக்குப்பதிவு 51.41 சதவீதமாக உள்ளது. அதிகபட்சமாக தருமபுரியில் 57.86 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது. விளவங்கோடு இடைத் தேர்தலில் 45 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

பாராளுமன்ற தேர்தலில் குறைந்தபட்சமாக மத்திய சென்னையில் 41.47 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், சென்னையில் உள்ள 3 மக்களவை தொகுதிகளிலும் வாக்குப்பதிவு மந்தமாக காணப்படுகிறது. தமிழகத்தின் மற்ற தொகுதிகளை ஒப்பிடுகையில் சென்னை மக்களிடம் வாக்களிக்கும் ஆர்வமில்லை.

குறைந்த வாக்குப்பதிவு கொண்ட தொகுதிகளாக வட, மத்திய, தென் சென்னை தொகுதிகள் உள்ளன. தென்சென்னையில் 42.10 சதவீதமும், வடசென்னையில் 44.84 சதவீத வாக்குகள் மட்டுமே பதிவாகி உள்ளது.

பொது விடுமுறை அளித்தும் சென்னை மக்கள் வாக்களிக்க வராமல் உள்ளனர்.

தமிழகத்தில் உள்ள 39 பாராளுமன்ற தொகுதிகளில் 31 தொகுதிகளில் 50 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பதிவாகியுள்ளது. காஞ்சிபுரத்தில் 49.94, திருவள்ளூரில் 49.82, திருநெல்வேலி 48.58, மதுரை 47.38, ஸ்ரீபெரும்புதூர் 45.96 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது.

# முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க இலவச வாகன வசதி தலைமை தேர்தல் அதிகாரி

சென்னை,ஏப்.20

நாடாளுமன்ற மக்களவை தேர்தல் நாடு முழுவதும் ஏப்ரல் 19ந்தேதி தொடங்கி, ஜூன் 1ந்தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. வாக்குகள் ஜூன் 4ந்தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளுக்கான தேர்தல் ஏப்ரல் 19ந்தேதி ஒரே கட்டத்தில் நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து, அரசியல் கட்சிகள் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டன. நேற்று மாலையுடன் கட்சிகளின் பிரசாரம் நிறைவடைந்தது. வாக்களிப்பதற்கு இன்னும் 24 மணிநேரம் கூட இல்லாத சூழலில், தேர்தல் களம் பரபரப்படைந்து உள்ளது. கடும் வெயிலிலும் மக்கள் தங்களுடைய ஜனநாயக கடமையை நிறைவேற்ற தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழகத்தில் நடைபெறவுள்ள மக்களவை தேர்தல் ஏற்பாடுகள் பற்றி சென்னை தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல்



அதிகாரி சத்யபிரத சாகு இன்று மதியம் விளக்கம் அளித்துள்ளார். அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, தமிழகத்தில் மொத்தம் 6.23 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

தமிழக தேர்தல் களத்தில் மொத்தம் 950 வேட்பாளர்கள் போட்டியில் உள்ளனர்.

அவர்களில் 874 பேர் ஆண் வேட்பாளர்கள். 76 பேர் பெண் வேட்பாளர்கள் ஆவர். 39 பொது பார்வையாளர்கள், 58 செலவின பார்வையாளர்கள் பணியில் உள்ளனர். இந்த தேர்தலில், 8,050 வாக்குச்சாவடிகள் பதற்றம் நிறைந்தவை என அடையாளம் காணப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

தேர்தலை முன்னிட்டு, 68,321 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. 3.3 லட்சம் பேர் தேர்தல் பணியில் ஈடுபடுவார்கள். 1.3 லட்சம் மாநில போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதற்காக, 190 கம்பெனி துணை ராணுவ படையினர் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

44,801 வாக்கு பதிவு மையங்களில் வெப் கேமிரா நிறுவப்பட்டு உள்ளன. மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க வசதியாக, வாக்குச்சாவடிகளில் சாய்வுதளம், சக்கர நாற்காலி வசதி செய்யப்பட்டு உள்ளது.

இதுவரை ரூ.173.85 கோடிக்கு ரொக்க பணம் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. ரூ.1,083 கோடி மதிப்பிலான நகை மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன. சிவிஜில் செயலி மூலம் இதுவரை 4,861 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் 1.58 லட்சம் மின்னணு இயந்திரங்கள் வாக்கு பதிவுக்கு பயன்படுத்தப்படும்.

காலை 7 மணி முதல் 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். மாலை 6 மணிக்கு மேல் வாக்களிக்க ஏதுவாக, டோக்கன் வழங்கி வாக்குப்பதிவு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது என்று தெரிவித்து உள்ளார். வாக்காளர் அடையாள அட்டை இல்லையென்றாலும் வாக்காளர்கள் தங்களுடைய ஆதார் கார்டு, பான் கார்டு உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஒன்றை கொண்டு சென்று வாக்களிக்கலாம். மாற்றுத்திறனாளிகள், முதியோர், கர்ப்பிணிகள் வாக்களிக்க ஏதுவாக வசதிகள் செய்யப்பட்டுள்ளது. 1950 என்ற எண்ணுக்கு அழைத்தால் வாக்களிக்க இலவசமாக வாகனம் அனுப்பி வைக்கப்படும்" இவ்வாறு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறினார்.

# ரெயில்வே தரைப்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்காததால் தேர்தலை புறக்கணித்த கிராம மக்கள்



பாலக்கோடு,ஏப்.20

தருமபுரி பாராளுமன்ற தொகுதி பாலக்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜோதி அள்ளி கிராமத்தில் நீண்ட நாட்களாக ரெயில்வே தரைபாலம் அமைக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் 1ந் தேதி கோரிக்கை நிறைவேற்றும் வரை தேர்தலை புறக்கணிப்பதாக பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டது.

ஆனால் இதுவரை எந்த அதிகாரிகளும் பேச்சு வார்த்தை கூட நடத்தவராததால் திட்டமிட்டபடி ஒட்டுமொத்த கிராம மக்களும் இன்று பாராளுமன்ற தேர்தலை புறக்கணித்துள்ளனர்.

இதனால் வாக்குசாவடி மையம் வெறிச்சோடி காணப்பட்டது. இக்கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் ஆண் வாக்காளர்கள் 768 பேரும், பெண் வாக்காளர்கள் 668 பேரும் என மொத்தம் ஆயிரத்து 436 வாக்குகள் உள்ள நிலையில் இதுவரை ஒருவாக்கு கூட பதிவாகாதது குறிப்பிடத்தக்கது. தற்போது வரை எந்த ஒரு தேர்தல் அதிகாரியும் கிராமத்துக்கு வரவில்லை என பொது மக்கள் வருத்தம் தெரிவித்தனர்.

# பழனி, நத்தம், திண்டுக்கல்லில் அடிப்படை வசதி கேட்டு தேர்தல் புறக்கணிப்பு போராட்டம்




பழனி,ஏப்.20

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள ஆயக்குடி டி.கே.என். புதூர் 2வது வார்டு பகுதியில் சுமார் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை எனக்கூறி தேர்தல் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருந்தனர். அதிகாரிகள் வந்து சமாதானம் செய்து சென்ற நிலையில் இன்று தாங்கள் யாரும் வாக்களிக்க செல்ல மாட்டோம் என கூறி ஊரின் முன்பு தேர்தல் புறக்கணிப்பு பதாகையை வைத்தனர். மேலும் வீடுகள் தோறும் கருப்பு கொடி கட்டி தாங்கள் நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

யாரும் ஊருக்குள் வர வேண்டாம் எனவும் அவர்கள் தெரிவித்ததால் பரபரப்பான சூழல் நிலவியது.

நத்தம் அருகே ஊராளிபட்டி ஊராட்சிக்குட்பட்டது சீரங்கம்பட்டி கிராமம். இங்கு 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இதில் 450 வாக்காளர்கள் உள்ளனர். இங்கு கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்து தரப்படவில்லை என கூறி பேனர்கள் வைத்து தேர்தல் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும் வீடுகளில் கருப்பு கொடி கட்டியும் தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இது குறித்து அப்பகுதி கிராம மக்கள் கூறுகையில்.

சீரங்கம்பட்டியில் இருந்து எட்டையம்பட்டிக்கு செல்லும் சாலை கடந்த 20 ஆண்டுகளாக குண்டும் குழியுமாக உள்ளது. இதை சரி செய்ய மாவட்ட, ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் பல முறை மனு கொடுத்தும் இன்னும் சாலை வசதி அமைத்து தரவில்லை. மேலும் கிராம மந்தைக்கு வண்ணக்கல் பதிக்க கோரிக்கை வைத்தோம். அதுவும் நிறைவேற்றப்படவில்லை. எங்கள் பகுதிக்கு பகுதி நேர ரேசன் கடை கேட்டு மனு கொடுத்தோம். இது வரை கடை அமைத்து தரவில்லை. மேலும் எங்கள் பல கோரிக்கைகளை நிறைவேற்றாததால் இந்த தேர்தலை புறக்கணிக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

இதேபோல் திண்டுக்கல் மாநகராட்சி 10வது வார்டுக்குட்பட்ட சின்ன அய்யன்குளம் பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரவில்லை என கூறி அப்பகுதி மக்கள் தங்கள் வீடுகள் முன்பு கருப்பு கொடி ஏற்றி தேர்தல் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நடிகர் மன்சூர் அலிகான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ்

சென்னை,ஏப்.20

வேலூர் தொகுதியில் இந்திய ஜனநாயக கட்சி சார்பில் நடிகர் மன்சூர் அலிகான் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். பலாப்பழம் சின்னத்தில் அவர் போட்டியிடுகிறார். தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட நிலையில் உடல்நலக்குறைவால் அவதிப்பட்ட மன்சூர் அலிகான், குடியாத்தத்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதிகளவு உடல் சோர்வுடன் வயிற்று வலி மற்றும் கால் வலியும் அவருக்கு இருந்ததால், டாக்டர்கள் அவரை சில நாட்கள் ஓய்வு எடுக்க அறிவுறுத்தினார். பின்னர் டாக்டர்கள் ஆலோசனைப்படி மன்சூர் அலிகான், சென்னை அசோக்நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையில் பிரசாரத்தின்போது தனது விஷம் கலந்த பழச்சாறு கொடுத்துவிட்டார்கள் என்று கூறியும் பரபரப்பு ஏற்படுத்தினார்.

இந்தநிலையில் நடிகர் மன்சூர் அலிகான் இன்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். நாடாளுமன்ற தேர்தல் நாளை நடைபெற உள்ள நிலையில் உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் தொகுதிக்கு செல்ல முடிவெடுத்துள்ளதாகவும், அதனால் தான் அவர் உடனடியாக டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார் என்றும், தேர்தல் முடிந்ததும், அவரது உடல்நிலைக்கேற்ப சிகிச்சை பெறுவார் என்றும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

## 'தி ப்ரூஃப்' ஃபேர்ஸ்ட் சிங்கிள் அப்டேட் வெளியீடு





2006 ஆம் ஆண்டு வெளியான திருடி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார் சாய் தன்ஷிகா. ஜெயம் ரவி நடிப்பில் 2009 ஆண்டு வெளிவந்த பேராண்மை படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து மக்கள் கவனத்தை ஈர்த்தார்.

மாஞ்சா வேலு, நில் கவனி செல்லாதே, அரவான், பரதேசி போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்தார். பா.ரஞ்சித் இயக்கத்தில் 2016 ஆம் ஆண்டு வெளிவந்த கபாலி படத்தில் ரஜினிகாந்தின் மகளாக நடித்து சிறப்பான நடிப்பை வெளிப்படுத்திருப்பார். அதற்கடுத்து துல்கர் சல்மானுடன் சோலோ என்ற படத்தில் நடித்தார்.

இந்நிலையில் தன்ஷிகா 'தி ப்ரூஃப்' படத்தில் நடித்துள்ளார். கோல்டன் ஸ்டுடியோசின் கீழ் கோமதி சத்யா இப்படத்தை தயாரித்துள்ளார். நடன இயக்குனரான ராதிகா மாஸ்டர் இப்படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தின் டிரெயிலர் சில நாட்களுக்கு முன் வெளியானது, படத்தின் டிரெய்லர் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

படத்தின் டிரெயிலர் யூடியூபில் இதுவரை 12 லட்ச பார்வைகளை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வரும் மே மாதம் 3 ஆம் தேதி தி ப்ரூஃப் திரைப்படம் வெளியாகவுள்ளது. படத்தின் முதல் பாடலை ஏப்ரல் 20 ஆம் தேதி இசையமைப்பாளர் இமான் அவரது எகஸ் பக்கத்தில் வெளியிடவுள்ளார். இப்படத்தில் அறிமுக இசையமைப்பாளரான தீபக் இசையமைத்துள்ளார்.

## கனா படத்தில் நடித்த சஜனா சஜீவன் இந்திய மகளிர் டி20 அணியில் இடம்பிடித்தார்



சிவகார்த்திகேயன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் இயக்குநர் அருண்ராஜா காமராஜ் இயக்கிய திரைப்படம் கனா. ஐஸ்வர்யா ராஜேஷ் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்த இந்த படம் மகளிர் கிரிக்கெட் தொடர்பானகதையம்சம் கொண்டிருந்தது. மாபெரும் வெற்றி பெற்ற இந்த படத்தில் கிரிக்கெட் வீராங்கனைகள் சிலரும் நடித்து இருந்தனர். அந்த வகையில், கனா படத்தில் நடித்த கிரிக்கெட் வீராங்கனை சஜனா சஜீவன் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியில் இடம்பிடித்துள்ளார். வங்காளதேசம் அணிக்கு எதிரான டி20 கிரிக்கெட் தொடரில் சஞ்சனா சஜீவன் இந்திய அணிக்காக களமிறங்க உள்ளார். வங்காளதேசம் அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டி20 தொடர் ஏப்ரல் 28 ஆம் தேதி துவங்க இருக்கிறது.

## மீண்டும் இணைந்து நடிக்கும் சூர்யா ஜோதிகா : இயக்குநர் யார் தெரியுமா?



சூர்யா ஜோதிகா 1999ம் ஆண்டு வெளியான 'பூவெல்லாம் கேட்டுப்பார்' திரைப்பத்தில் முதன் முதலாக இணைந்து நடித்தனர். அதை தொடர்ந்து இந்த ஜோடி உயிரிலே கலந்தது, பேரழகன், காக்க காக்க, சில்லுனு ஒரு காதல், மாயாவி உள்ளிட்ட திரைப்படங்களை ஒன்றாக இணைந்து நடித்தனர்.

இதனையடுத்து சூர்யா ஜோதிகா இருவரும் 2006ம் ஆண்டு இருவீட்டாரின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொண்டனர்.

திருமணத்திற்கு பிறகு நடிப்பதில் இருந்து விலகி இருந்த ஜோதிகா '36 வயதினிலே' திரைப்படம் மூலம் ரீ என்ட்ரி கொடுத்தார். அதை தொடர்ந்து காற்றின் மொழி, பொன்மகள் வந்தாள், நாச்சியார், மகளிர் மட்டும்போன்றகதாநாயகிக்குமுக்கியத்துவம்கொடுக்கும்படங்களில் நடித்து வந்தார். அண்மையில் மலையாளத்தில் மம்மூட்டி ஜோடியாக 'காதல் தி கோர்' மற்றும் அஜய் தேவ்கன் ஜோடியாக பாலிவுட்டில் 'ஷைத்தான்' படத்திலும் நடித்திருந்தார்.

நடிகர்சூர்யாதற்போது சிவா இயக்கத்தில் 'கங்குவா' படத்தில் நடித்துள்ளார். இப்படம் இந்த ஆண்டில் வெளியாக உள்ளது.

அண்மையில் சூர்யா மற்றும் ஜோதிகா இருவரும் ஒன்றாக இணைந்து ஜிம்மில் கடுமையாக உடற்பயிற்சி செய்யும் வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 18 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் சூர்யா ஜோதிகா ஜோடி மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த படத்தை சில்லு கருப்பட்டி படத்தை இயக்கிய ஹலிதா ஷமீம் அல்லது பெங்களூர் டேஸ் என்ற மலையாள படத்தை இயக்கிய அஞ்சலி மேனன் இயக்குவார் என சொல்லப்படுகிறது.

விரைவில் இப்படம் குறித்த அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பார்சிலோனா ஓபன் டென்னிஸ்: அரையிறுதிக்கு முன்னேறினார் காஸ்பர் ரூட்




பார்சிலோனா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள்ஒற்றையர்பிரிவு 2வது சுற்று ஆட்டத்தில் நார்வேயின் காஸ்பர் ரூட், இத்தாலியின் மேட்டியோ அர்னால்டியுடன் மோதினார்.

இதில் காஸ்பர் ரூட் 64, 63 என்ற செட் கணக்கில் எளிதில் வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

## ஐ.பி.எல். 2024 டாஸ் வென்ற லக்னோ அணி பந்துவீச்சு தேர்வு



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் 34 ஆவது போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதுகின்றன. லக்னோவில் நடைபெறும் இந்த போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது.

இதுவரை ஆறு போட்டிகளில் விளையாடியுள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நான்கு போட்டிகளில் வெற்றி, இரண்டு போட்டிகளில் தோல்வியை தழுவியுள்ளது. லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி ஆறு போட்டிகளில் நான்கு வெற்றி, கடைசியாக ஆடிய இரு போட்டிகளில் தோல்வியுற்றது.

அந்தவகையில்,கடைசியாகவிளையாடியஇரண்டுபோட்டிகளில் வெற்றி பெற்றுள்ள சென்னை அணி வெற்றியை தொடரவும், கடைசி இரு போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ள லக்னோ அணி இன்றைய போட்டியில் வெற்றி பெறும் முனைப்பிலும் களம் காண்கின்றன.

## கேண்டிடேட் செஸ் போட்டி: 12வது சுற்றில் குகேஷ் வெற்றி 3 வீரர்கள் 7.5 புள்ளிகளுடன் முன்னிலை



உலக சாம்பியனுடன் மோதும் வீரர், வீராங்கனை யார்? என்பதை முடிவு செய்யும் கேண்டிடேட் செஸ் போட்டி கனடாவில் உள்ள டொரான்டோ நகரில்நடைபெற்றுவருகிறது.இதில்இந்தியாசார்பில்5பேர்பங்கேற்றுள்ளனர்.

14 ரவுண்டுகளை கொண்ட இந்த போட்டி தொடரின் 12வது சுற்று நேற்று நடந்தது.

சென்னையை சேர்ந்த கிராண்ட்மாஸ்டர் டி.குகேஷ் இந்த சுற்றில் அஜர்பைஜான் வீரர் நிஜாத் அப்சோவை எதிர் கொண்டார். கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் இந்த ஆட்டத்தில் 57வது நகர்த்தலுக்கு பிறகு வெற்றி பெற்றார். அவர் பெற்ற 4வது வெற்றியாகும். அப்சோவை 2வது முறையாக வீழ்த்தியுள்ளார்.

மற்றொரு சென்னை கிராண்ட் மாஸ்டரான பிரக்ஞானந்தா 12வது சுற்றில் ரஷியாவை சேர்ந்த இயன் நெபோம்னியாச்சியுடன் மோதினார் . கறுப்பு நிற காய்களுடன் விளையாடி பிரக்ஞானந்தா டிரா செய்தார்.

மற்றொரு இந்திய வீரர் விதித் குஜராத்தி அமெரிக்கா வீரர் பேபியானோவிடம் தோல்வியை தழுவினார். இன்னொரு ஆட்டத்தில் ஹிகாரு நகமுரா (அமெரிக்கா) பிரான்சை சேர்ந்த பிரவுசியாவை தோற்கடித்தார்.

12 சுற்றுகள் முடிவில் குகேஷ், இயன் நெபோம்னியாச்சி, ஹிகாரு நகமுரா ஆகிய 3 வீரர்கள் தலா 7.5 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளனர். பேபியானோ 7 புள்ளியுடன் 4வது இடத்தில் உள்ளார்.

பிரக்ஞானந்தா 6 புள்ளியுடன் 5வது இடத்திலும், விதித் குஜராத்தி 5 புள்ளியுடன் 6வது இடத்திலும் இருக்கிறார்கள். பிரவுசியா 4.5 புள்ளியுடன் 7வது இடத்திலும், அப்சோவ் 3 புள்ளியுடன் கடைசி இடத்திலும் உள்ளனர். இன்னும் 2 சுற்றுகளே எஞ்சியுள்ளன. இன்று ஓய்வு நாளாகும்.

பெண்கள் பிரிவில் வைஷாலி 12வது சுற்றில் வெற்றி பெற்றார். உக்ரைன் வீராங்கனை அன்னா முசிசெக்கை தோற்கடித்தார். மற்றொரு இந்திய வீராங்கனை ஹம்பி மோதிய ஆட்டம் 'டிரா' ஆனது.

ஹம்பி 6 புள்ளியுடன் 3 முதல் 5வது இடங்களிலும், வைஷாலி 5.5 புள்ளியுடன் 6வது இடத்திலும் உள்ளனர்.

## மே 10 ஆம் தேதி வெளியாகும் கவினின் ஸ்டார்




டாடா படத்தின் வெற்றியைத் தொடர்ந்து கவின் அடுத்ததாக இளன் இயக்கத்தில் ஸ்டார் படத்தில் நடித்துள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார் . இளன் இதற்கு முன் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் வெளிவந்த 'பியார் பிரேமா காதல்' படத்தை இயக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

கவின், லால், கீதா கைலாசம், அதிதி பொஹங்கர், ப்ரீத்தி முகுந்தன் ஆகியோர் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். படத்தின் பாடலான விண்டேஜ் லவ் சில வாரங்களுக்கு முன் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் படம் வரும் மே 10 ஆம் தேதி வெளியாகவுள்ளது. டாடா வெற்றியைத் தொடர்ந்து இப்படமும் கவினுக்கு மிகப் பெரிய வெற்றியை கொடுக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## புஷ்பா 2 ஓடிடி உரிமத்தை வாங்கிய நெட்ப்ளிக்ஸ் எத்தனை கோடி தெரியுமா?




கடந்த 2021ம் ஆண்டு வெளியான படம், 'புஷ்பா'. தெலுங்கின் முன்னணி நடிகர் அல்லு அர்ஜுனின் அசத்தல் நடிப்பில், பிரபல இயக்குனர் சுகுமார் இயக்கிய இந்த படம் வெற்றி பெற்றதையடுத்து, இதன் அடுத்த பாகம் தற்போது உருவாகி உள்ளது.

இதில் அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, பஹத் பாசில், சுனில் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். 'மைத்ரி மூவி மேக்கர்ஸ்' இப்படத்தை தயாரித்துள்ளது. இப்படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. முதல் பாகத்தை விட மிகவும் பிரம்மாண்டமாக இந்தப் படம் தயாராகி வருகிறது.

இதனையடுத்து, நடிகர் அல்லு அர்ஜுனின் பிறந்த நாளான இன்று ரசிகர்களுக்கு விருந்தளிக்கும் வகையில் புஷ்பா 2 படத்தின் மிரட்டலான டீசரை படக்குழு வெளியிட்டிருந்தது. இந்நிலையில் புஷ்பா 2 திரைப்படத்தை வருகிற ஆகஸ்ட் 15 ந் தேதி திரையரங்குகளில் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது. புஷ்பா தி ரைஸ் படத்தின் வெற்றியை போலவே இந்தப் பாகமும் மிகப்பெரிய வெற்றி பெரும் என எதிர்பார்க்கப்படுகிறது

புஷ்பா படத்தின் ஓடிடி உரிமத்தை அமேசான் பிரைம் சுமார் 100 கோடி கொடுத்து வாங்கியிருந்தது. இந்நிலையில், தற்போது புஷ்பா 2 அதை விட அதிக தொகைக்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

புஷ்பா 2 படத்தின் இந்தி மொழி உரிமத்தை தயாரிப்பாளர் அனில் தடானி 200 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளன. எனவே இந்தியில் மட்டுமே 500 கோடிக்கு மேல் புஷ்பா 2 வசூல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், நெட்பிளிக்ஸ் நிறுவனம் 275 கோடி ரூபாய் கொடுத்து அல்லு அர்ஜுனின் புஷ்பா 2 படத்தின் ஓடிடி உரிமையை வாங்கியிருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இதற்கு முன்பு ராஜமௌலி இயக்கத்தில் வெளியான ஆர்ஆர்ஆர் படமே அதிக பட்சமாக 175 கோடிக்கு 3 ஓடிடி நிறுவனங்களிடம் விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

## சினிமாவில் நிராகரிப்பு, அவமானங்களை சந்தித்தேன் ஷில்பா ஷெட்டி ஓபன் டாக்

பிரபல இந்தி நடிகை ஷில்பா ஷெட்டி. 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தி சினிமாவில் நடிகையாக இருந்து வருகிறார். இந்நிலையில் சமீபகாலமாக பல்வேறு வணிகத்திலும் அவர் ஈடுபட்டு உள்ளார். மும்பை மாநகரத்தின் மைய பகுதியில் 'பாஸ்டியன் உணவகம்' என்ற பெயரில் ஹோட்டல் ஒன்றும் நடத்தி வருகிறார்.இந்த உணவகம் தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது. 48 வயதாகும் ஷில்பா தற்போது பஞ்சாபி இல்லத்தரசி கேரக்டரில் ஒரு இந்தி படத்திலும் நடித்து உள்ளார். நடிகை ஷில்பா ஷெட்டி அளித்த பேட்டியில் கூறியதாவது :

எனது திரைப்பட வாழ்க்கையின் தொடக்கத்தில் தயாரிப்பாளர்களிடம் இருந்து பல நிராகரிப்பு, அவமானங்களை நான் சந்தித்தேன். ஏமாற்றம், மனச்சோர்வு அடைந்தாலும் முயற்சியை கைவிடவில்லை. நான் ஒல்லியாகவும், உயரமாகவும் இருந்தேன். கல்லூரி படிப்பு முடிந்ததும் நான் என் தந்தையுடன் வேலை செய்ய விரும்பினேன். புதிதாகவும் சிறப்பாகவும் ஏதாவது செய்ய வேண்டும் என எனக்கு ஆசை இருந்தது. இந்நிலையில் ஒரு 'பேஷன் ஷோ' நிகழ்ச்சி பார்க்க சென்ற போது எனது நிலைமை மாறியது. ஒரு புகைப்படக்கலைஞர் என்னை படம் எடுத்தார். அதன் மூலம் பேஷன் துறைக்கு அறிமுகமானேன்.அதன் பிறகு எனக்கு முதல் பட வாய்ப்பு கிடைத்தது. நான் நடிக்க வந்தபோது எனக்கு வயது 17. அப்போது நான் உலகத்தைப் பார்க்கவில்லை, வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவில்லை.இந்தியில் பேசத் தெரியாமல், கேமரா முன் நிற்பதை நினைத்து பதட்டமாக இருந்தது. அதன்பின் முயற்சி செய்து நடித்து பிரபலமானேன்

பிக்பாஸ் நிகழ்ச்சியில் மற்ற போட்டியாளர்கள் பாகுபாடு காட்டியது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் நான் விடாப்பிடியாக இருந்தேன். இவ்வளவு தூரம் வந்த பிறகு ஒரு அடி கூட பின்வாங்க மனமில்லை.

நான் வெற்றி பெற்ற பிறகு, என்னை பலர் பாராட்டினர். எனது விடாமுயற்சி, போராடும் குணம் தான் எனக்கு வெற்றியை தேடித் தந்தது. தற்போது நான் ஒரு வலிமையான சுதந்திர பெண்ணாகவும், நடிகையாகவும், மனைவியாகவும், தாயாகவும் உள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

ஷில்பா ஷெட்டி தொழிலதிபர் ராஜ் குந்த்ராவை மணந்தார். இவர்களுக்கு வியான் மற்றும் ஷமிஷா என இரு குழந்தைகள் உள்ளனர். இவருக்கு ஆடம்பர பங்களா உள்ளிட்ட ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துக்கள் உள்ளன. மேலும் ஷில்பா ஷெட்டிக்கு சொந்தமாக 'ஜெட்' விமானம் ஒன்று உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியா பாகிஸ்தான் இடையே டெஸ்ட் போட்டிகள் நடைபெற வேண்டும் ரோகித் சர்மா



இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா, இங்கிலாந்து முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன், ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் ஆகியோருடன் யூடியூப் விவாத நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அப்போது அவரிடம் முன்வைக்கப்பட்ட சில கேள்விகளுக்கு சுவாரஸ்யமாக பதில் அளித்தார்.

இந்திய அணி, பரம போட்டியாளரான பாகிஸ்தானுடன் 201213ம் ஆண்டுக்கு பிறகு நேரடி கிரிக்கெட் தொடரில் விளையாடவில்லை. ஐ.சி.சி. உலகக் கோப்பை மற்றும் ஆசிய கோப்பை போட்டிகளில் மட்டும் பாகிஸ்தானுடன் இந்திய அணி மோதுகிறது. மற்றபடி இரு நாட்டு தொடருக்கு பாதுகாப்பு பிரச்சினையை காரணம் காட்டி மத்திய அரசு அனுமதி மறுக்கிறது.

நேரடி தொடர் என்று பார்த்தால் பாகிஸ்தான் அணி கடைசியாக 201213ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. அதே சமயம் இவ்விரு அணிகளும் டெஸ்ட் கிரிக்கெட்டில் சந்தித்து 17 ஆண்டுகள் உருண்டோடி விட்டது.

இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த ரோகித் சர்மா, 'ஐ.சி.சி. தொடர்களை தவிர்த்து இந்தியா பாகிஸ்தான் இடையே இரு நாட்டு போட்டிகளும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று விரும்புகிறேன். இவ்விரு அணிகளும் பொதுவான இடத்தில் டெஸ்ட் போட்டியில் விளையாடினால் அது டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும், இரு நாட்டு கிரிக்கெட் வாரியங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பாகிஸ்தான் சிறந்த வீரர்களை கொண்டுள்ள அணி. குறிப்பாக பந்து வீச்சு வலுவாக உள்ளது. அவர்களுடன் வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டியில் மோதினால் நிச்சயம் அது ஆகச்சிறந்த போட்டியாக இருக்கும். அற்புதமான ஒரு தொடராக அமையும். முழுக்க முழுக்க கிரிக்கெட் அடிப்படையில் இதை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். மற்ற விஷயங்களில் எனக்கு ஆர்வம் கிடையாது' என்றார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 'இம்பேக்ட்' விதிப்படி ஒவ்வொரு அணியும் கூடுதலாக ஒரு பேட்ஸ்மேன் அல்லது பந்து வீச்சாளரை மாற்று வீரராக சேர்க்க முடிகிறது.

இந்த புதுமையான விதி குறித்து ரோகித் கூறுகையில், 'இம்பேக்ட் விதிமுறையால் ஆல்ரவுண்டர்களின் திறமை மேம்படுவது தடுக்கப்படுவதாக நினைக்கிறேன். ஏனெனில் கிரிக்கெட் என்பது 11 பேர் விளையாட்டே தவிர, 12 பேர் அல்ல. எனவே இம்பேக்ட் விதி என்னை பெரிய அளவில் ஈர்க்கவில்லை. இது ரசிகர்களுக்கு வேண்டுமென்றால் இன்னும் அதிகமாக பொழுதுபோக்கை கொடுக்கலாம். ஆனால் கிரிக்கெட்டை வைத்து பாருங்கள். உதாரணமாக வாஷிங்டன் சுந்தர், ஷிவம் துபே போன்ற ஆல்ரவுண்டர்கள் இம்பேக்ட் விதியால் பந்து வீசும் வாய்ப்பை பெறவில்லை. இது இந்திய கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல.

மேலும், 2008ம் ஆண்டு முதல் 2023ம்ஆண்டு வரை ஐ.பி.எல்.ல் இரண்டு முறை மட்டுமே 250 ரன்களுக்கு மேல் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் நடப்பு ஐ.பி.எல்ல் இப்போதே 4 தடவை 250 ரன்களுக்கு மேல் குவிக்கப்பட்டு விட்டன என்றால், இந்தி விதிமுறையின் தாக்கத்தை கவனியுங்கள். அது மட்டுமின்றி கூடுதலாக ஒரு முன்னணி பேட்ஸ்மேன் இறங்கும் போது, உங்களது வழக்கமான 6வது அல்லது 7வது வரிசை பேட்ஸ்மேன்கள் 78 பந்துகளை சந்திக்க மட்டுமே வாய்ப்பு கிடைக்கிறது' என்றார்.

மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த ரோகித் சர்மா, 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் அணித் தேர்வு தொடர்பாக தேர்வு குழு தலைவர் அஜித் அகர்கர், பயிற்சியாளர் ராகுல் டிராவிட் ஆகியோருடன் நான் ஆலோசனை நடத்தியதாக வெளியான தகவல் உண்மை இல்லை என்றும் கூறினார்.



கதங்காத்துக்கற்றடங்கல்ஆற்றுவான்செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

**விளக்கம்:**

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து மு.வ உரை: சினம் தோன்றாமல் காத்து, கல்வி கற்று, அடக்கமுடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.